**<u>செய்தி வெளியீடு எண்.456</u>** **<u>நாள்.7.8.09</u>**

**மக்கள் நல்வாழ்வுத் துறை**

**செய்தி வெளியீடு**

"உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்" தமிழக அரசால் 23.07.2009 அன்று தொடங்கப்பட்டு தற்போது நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 83 நோயாளிகள் தனியார் மருத்துவமனைகளில் உயர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு அவர்களில் 36 நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. தற்போது அவர்கள் நலமாக உள்ளனர்.

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு முடி திருத்துவோர் நல வாரியம், தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெசவுத் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு காலணி தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு ஓவியர் நல வாரியம், தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம், தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நல வாரியம், தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம், தமிழ்நாடு தூய்மை பணிபுரிவோர் நல வாரியம், தமிழ்நாடு சீர்மரபினர் நல வாரியம், தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம், உலாமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம், தமிழ்நாடு மீனவர் நல வாரியம், தமிழ்நாடு அரவாணிகள் நல வாரியம், தமிழ்நாடு ஊனமுற்றோர் நல வாரியம், தமிழ்நாடு கிராமக் கோயில் பூசாரிகள் நல வாரியம், தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு வணிகர் நல வாரியம் ஆகிய 26 தொழிலாளர் நல வாரியங்களின்

உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் இத்திட்டத்தில் பயன் பெறுவார்கள். மேலும் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000/—க்கும் குறைவாக உள்ள அனைத்து குடும்பங்களும் இத்திட்டத்தில் பயன் பெற தகுதியானவர்கள். அரசு ஊழியர்கள், ஒய்வூதியம் பெறுவோர் (Civil Pensioners), தொழிலாளர் நல ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் பயன் பெறுவோர் மற்றும் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000/—க்கும் அதிகமாக உள்ள குடும்பங்கள் இத்திட்டத்தில் உறுப்பினராக சேர தகுதியற்றவர்கள் ஆவார்கள். இத்திட்டத்தில் ஒரு குடும்பம் நான்கு ஆண்டுக்கு ரூபாய் ஒரு இலட்சம் வரை இலவசமாக சிகிச்சையை பெறலாம்.

இதயம் மற்றும் இதய நெஞ்சக அறுவை சிகிச்சை, புற்று நோய் மருத்துவம், சிறுநீரக நோய்கள், மூளை மற்றும் நரம்பு மண்டலம், முட நீக்கியியல் அறுவை சிகிச்சைகள், கண் நோய் சிகிச்சை, இரத்தக் குழாய்களுக்கான அறுவை சிகிச்சை, இரைப்பை (ம) குடல் நோய்கள், ஒட்டுறுப்பு (பிளாஸ்டிக்) அறுவை சிகிச்சைகள், காது, மூக்கு மற்றும் தொண்டை நோய்கள், கருப்பை நோய்கள், நெஞ்சக நோய்கள், இரத்த நோய்கள் போன்ற 51 வகையான நோய்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சையை இலவசமாக பெறலாம். மேற்குறிப்பிட்ட நோய்கள் தவிர மற்ற நோய்களுக்கான பரிசோதனைகளுக்கு ஏற்படும் செலவுகள்; சிகிச்சைக்கு முன்பும், பின்பும் ஏற்படும் மருந்து, மாத்திரைகள் மற்றும் போக்குவரத்து செலவுகள் மற்றும் வேறு சிகிச்சைகளுக்கான செலவுகள் இந்த திட்டத்தில் பெற முடியாது.

இந்த காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்த ஸ்டார் ஹெல்த் மற்றும் அலைடு இன்சூரன்ஸ் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் இந்த திட்டத்தை செயல்படுத்த இதுவரை 356 தனியார் மருத்துவமனைகளை அங்கீகரித்துள்ளது. இந்த மருத்துவமனைகளின் விவரங்கள் அதன் இணைய தளத்தில் (www.startanhins.in) காணலாம். இந்த நிறுவனம் அங்கீகரித்த மருத்துவமனைகளில் மட்டுமே சிகிச்சை பெற முடியும். மருத்துவ செலவாக

ரூபாய் ஒரு இலட்சம் வரை பயனீட்டாளர்கள் இலவசமாக பெறலாம். இதற்காக மருத்துவமனைக்கு தொகை எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

ஸ்டார் ஹெல்த் காப்பீட்டு நிறுவனம் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் கணினி வசதியுடன் கூடிய செயல் அலுவலகத்தை அமைத்து வருகிறது மேலும் தொடர்ப்பு அதிகாரி ஒருவரையும், மருத்துவ ஆலோசனைகள் வழங்க மருத்துவ ஆலோசகரையும் நியமனம் செய்து வருகிறது.

இந்த திட்டத்தில் உறுப்பினர்களை கண்டறிந்து சிறப்பு அடையாள அட்டை வழங்க காப்பீட்டு நிறுவனம் 750 குழுக்களை அமைத்துள்ளது. இந்த குழுக்கள் ஒவ்வொரு கிராமம் மற்றும் நகரப் பகுதிகளுக்கு வந்து உறுப்பினர்களை கண்டறிந்து, சிறப்பு அடையாள அட்டையை வழங்கும். பத்திரிக்கை வாயிலாக உறுப்பினர் சேர்க்கை நடைபெறும் நாள் மற்றும் இடங்கள் முன்னதாக தெரிவிக்கப்படும். இந்த பணி மூன்று மாத காலத்தில் முடிவடைந்து அனைவருக்கும் சிறப்பு அடையாள அட்டை வழங்கப்படும். அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் இந்த சிறப்பு அடையாள அட்டையை காண்பித்து சிகிச்சையை பெறலாம்.

சிறப்பு அடையாள அட்டை வழங்கும் வரை எவருக்கேனும் மேற்கண்ட 51 நோய்களுக்கு சிகிச்சை பெற வேண்டிய தேவை ஏற்பட்டால், நலவாரிய உறுப்பினர்கள் தங்களது அடையாள அட்டையை காண்பித்தும், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் சிகிச்சை பெற வாரிய உறுப்பினர் அடையாள அட்டை, குடும்ப அட்டையின் நகல் மற்றும் கிராம பகுதிகளில் கிராம நிர்வாக அலுவலரிடம் பெறப்பட்ட நிழற்படச் சான்று மற்றும் நகரப் பகுதிகளில் வரி வசூலிப்பவரிடம் (Bill Collector) பெறப்பட்ட நிழற்படச் சான்று அல்லது அரசால் வழங்கப்பட்ட ஏதேனும் ஒரு புகைப்படச் சான்று ஆகியவற்றை மருத்துவமனையில் காண்பித்து சிகிச்சை பெறலாம். நல வாரிய உறுப்பினர் அல்லாதவர்கள் குடும்ப அட்டையின் நகல்,

கிராம நிர்வாக அலுவலரிடம் பெறப்பட்ட குடும்ப வருமானச் சான்றிதழ் மற்றும் புகைப்படச் சான்று அல்லது அரசால் வழங்கப்பட்ட ஏதேனும் ஒரு புகைப்பட சான்று ஆகியவற்றை காண்பித்து சிகிச்சையை இலவசமாக பெறலாம்.

மேலும் இந்த திட்டம் தொடர்பான விவரங்கள் மற்றும் சந்தேகங்களுக்கு விளக்கம் பெற 24 மணி நேரமும் இயங்கும் இலவச தகவல் சேவை மையம் ஒன்று ஸ்டார் ஹெல்த் மற்றும் அலைடு இன்சூரன்ஸ் நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ளது. கட்டணம் இல்லா தொலைபேசி எண்–1800 425 2670–ல் மேற்கண்ட மையத்தை தொடர்பு கொண்டு தேவையான விவரங்களை கேட்டறியலாம்.

எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**